# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மெய்யெழுத்துகள்

அ ) 12 ☐ ஆ ) 18 ☐

இ ) 30 ☐ ஈ ) 06 ☐

2. மக்களின் புறத்தோற்ற வளர்ச்சியினை ____________ என அழைப்பர்.

அ ) பண்பாடு ☐ ஆ ) ஒழுக்கம் ☐

இ ) நாகரிகம் ☐ ஈ ) சான்றாண்மை ☐

3. போர்த்துக்கேயர் இலங்கையை வந்தடைந்த நூற்றாண்டு

அ ) 12 ஆம் நூற்றாண்டு ☐

ஆ ) 18 ஆம் நூற்றாண்டு ☐

இ ) 16 ஆம் நூற்றாண்டு ☐

ஈ ) 15 ஆம் நூற்றாண்டு ☐

4. தாயகத்தில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்

அ ) யாழ்ப்பாணம் ☐ ஆ ) திருகோணமலை ☐

இ ) மட்டக்களப்பு ☐ ஈ ) வவுனியா ☐

5. சிரித்தல் என்பது

அ ) பொருட்பெயர் ☐ ஆ ) இடப்பெயர் ☐

இ ) தொழிற்பெயர் ☐ ஈ ) காலப்பெயர் ☐

6. எல்லாள மன்னன் வெற்றி கொண்டது

அ ) சேனனை ☐ ஆ ) அசேலனை ☐

இ ) துட்டகெமுனுவை ☐ ஈ ) குத்திகனை ☐

7. **பழமொழி :** நீர் அடித்து ____________ விலகுமா.

அ ) தேர் ☐ ஆ ) நீர் ☐

இ ) மோர் ☐ ஈ ) கார் ☐

8. தமிழ் + இசை என்பதைச் சேர்த்து எழுதினால்

அ ) தமிழ்இசை ☐ ஆ ) தமிழிசை ☐

இ ) தமிழ்ழிசை ☐ ஈ ) தமிழிஇசை ☐

9. நான்கு நூற்றாண்டுகளாக நந்திக் கொடியின் கீழ் நின்று நிலைத்த அரசு

அ ) சிங்கள அரசு ☐ ஆ ) கோட்டை அரசு ☐

இ ) யாழ்ப்பாணத் தமிழரசு ☐ ஈ ) கண்டியரசு ☐

10. குச்சியில் ஆமையைத் தூக்கிச் சென்ற பறவைகள்

அ ) கொக்குகள் ☐ ஆ ) நாரைகள் ☐

இ ) பருந்துகள் ☐ ஈ ) கழுகுகள் ☐

11. நிகழ்கால இடைநிலைகள்

அ ) கிறு, கின்று ☐ ஆ ) த், ட் ☐

இ ) ப், வ் ☐ ஈ ) ற், இன் ☐

12. தமிழ் மன்னன் எல்லாளன் இலங்கையை ஆண்ட ஆண்டுகள்

அ ) 44 ☐ ஆ ) 34 ☐

இ ) 22 ☐ ஈ ) 36 ☐

13. மேழி என்பதன் பொருள்

அ ) கலப்பை
ஆ ) உழவர்
இ ) கழனி
ஈ ) காளை

14. எதிர்காலத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) வரைந்தான்
ஆ ) வரைவான்
இ ) வரைகிறான்
ஈ ) வரைந்தேன்

15. 1833 இல் தமிழ் சிங்கள ஆட்சிப் பகுதிகளை ஒன்றிணைத்தவர்

அ ) ஆங்கிலேயர்
ஆ ) ஒல்லாந்தர்
இ ) போர்த்துக்கேயர்
ஈ ) களப்பிரர்

16. "பூவாதே காய்க்கும் மரமும்" என்ற பாடல் இடம் பெற்ற நூல்

அ ) மூதுரை
ஆ ) நீதிநெறிவிளக்கம்
இ ) நல்வழி
ஈ ) ஆத்திசூடி

17. இரும்பாணி என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ ) இரும்பு + ஆணி
ஆ ) இரும் + ஆணி
இ ) இரும் + பாணி
ஈ ) இரு + ஆணி

18. மணிபல்லவம் இன்று ____________ என அழைக்கப்படுகிறது.

அ ) நெடுந்தீவு
ஆ ) கல்யாணி
இ ) மண்டதீவு
ஈ ) நயினாதீவு

19. திராவிட மொழியியலின் தந்தை எனச் சிறப்பிக்கப்பட்டவர்

அ ) தேசிகவிநாயகம்பிள்ளை ☐

ஆ ) கால்டுவெல் ☐

இ ) தாவீது அடிகள் ☐

ஈ ) வன்லீவன்குக் ☐

20. பின்வருவனவற்றுள் வல்லின மெய் எழுத்து

அ ) ஒ ☐ ஆ ) ற் ☐

இ ) கொ ☐ ஈ ) ஃ ☐

21. மான உணர்வும் ஊக்கமும் உடைய விலங்கு

அ ) புலி ☐ ஆ ) யானை ☐

இ ) எலி ☐ ஈ ) பன்றி ☐

22. குமண மன்னனைக் காணக் காட்டுக்குச் சென்ற புலவர்

அ ) திருவள்ளுவர் ☐ ஆ ) கபிலர் ☐

இ ) பெருந்தலைச் சாத்தனார் ☐ ஈ ) ஔவையார் ☐

23. பச்சைக் கிளி பழத்தைக் கொத்தியது. இச்சொல்லியத்தின் செயப்படுபொருள்

அ ) கொத்தியது ☐ ஆ ) கிளி ☐

இ ) பழத்தை ☐ ஈ ) பச்சை ☐

24. பெயர்ச் சொற்கள்

அ ) ஏழுவகை ☐ ஆ ) ஐந்துவகை ☐

இ ) ஆறுவகை ☐ ஈ ) எட்டுவகை ☐

25. சென்ற இடம் எல்லாம் சிறப்பைப் பெறுபவன்

அ ) மன்னன் ☐ ஆ ) ஏழை ☐

இ ) கற்றோன் ☐ ஈ ) கல்லாதவன் ☐

26. வெற்றி என்பதன் எதிர்ச்சொல்

அ ) மகிழ்ச்சி ☐ ஆ ) தோல்வி ☐

இ ) துன்பம் ☐ ஈ ) வீரம் ☐

27. தனிமரம் தோப்பாகாது என்பது

அ ) விடுகதை ☐ ஆ ) பழமொழி ☐

இ ) நொடி ☐ ஈ ) குறள் ☐

28. பாரி தேரின் மேல் படர விட்ட கொடி

அ ) அடம்பன் ☐ ஆ ) முல்லை ☐

இ ) அல்லி ☐ ஈ ) மல்லிகை ☐

29. அம்மா அங்காடிக்குச் சென்று பழங்கள் வாங்கினார். இது

அ) வினாச் சொல்லியம் ☐

ஆ) தொடர்ச் சொல்லியம் ☐

இ ) தனிச் சொல்லியம் ☐

ஈ ) ஏவல் சொல்லியம் ☐

30. உயிரை விட மானமே பெரிதென உயிர் நீத்த மன்னன்

அ ) குமணன் ☐ ஆ ) இரும்பொறை ☐

இ ) கரிகாலன் ☐ ஈ ) செங்கணான் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

வண்ணத்துப்பூச்சி பூச்சி இனத்தைச் சேர்ந்தது. இது அழகிய வண்ணங்களைக் கொண்டது. பெண் வண்ணத்துப்பூச்சி இலைகளின் அடிப்பகுதியில் முட்டை இடும். ஐந்து நாட்களின் பின்பு முட்டையிலிருந்து புழு வெளிவரும். இது அருகில் உள்ள இலைகளை உணவாக உண்ணும். சில நாட்களின் பின் அந்தப்புழு தன்னைச் சுற்றிலும் கூடு ஒன்றைக் கட்டிக் கொள்ளும். பின் கூட்டுக்குள் முழுவளர்ச்சி அடைந்து கூட்டை உடைத்துக் கொண்டு வண்ணத்துப்பூச்சியாக வெளிவரும். இதுவே அழகான வண்ணத்துப்பூச்சியாக அங்கும் இங்கும் பறந்து செல்கிறது.

1. வண்ணத்துப்பூச்சி எவ்வினத்தைச் சேர்ந்தது?

   ________________________________________

2. பெண் வண்ணத்துப்பூச்சி எங்கே முட்டை இடும்?

   ________________________________________

3. புழு எவற்றை உணவாக உண்ணும்?

   ________________________________________

4. எது தன்னைச் சுற்றிலும் கூடு ஒன்றைக் கட்டிக் கொள்ளும்?

   ________________________________________

5. எது கூட்டை உடைத்துக் கொண்டு வெளிவரும்?

   ________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. "ஊக்கமது கைவிடேல்" இக்கூற்று இடம்பெற்றுள்ள நூல் எது?

______________________________

______________________________

2. நாட்டார் பாடல் வகைகளில் இரண்டின் பெயர்களை எழுதுக.

______________________________

______________________________

3. குளத்தில் தண்ணீர் வற்றியதால் கூடி இருந்து வருந்தியவை எவை?

______________________________

4. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?

______________________________

5. பெலிவாவியின் இன்றைய பெயர் என்ன ?

______________________________

6. *குறள்:-* பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்

இக்குறளின் பொருளை எழுதுக.

______________________________

______________________________

7. தமிழரிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளில் இரண்டினைத் தருக.

______________________________

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## முயற்சி செய்

| | | | | |
|---|---|---|---|---|
| துன்பம் | உந்தன் | இயற்றி | செய்தி | வரைந்து |

ஓய்வாக இருக்கையில் தம்பி - நீ
ஓவியம் ________________ பழகு !
தூய்மையோடு அமைதி சேரும் - நன்கு
தோன்றிடும் உள்ள அழகு!

பாக்களும் ________________ப் பழகு - நல்ல
பாடலைப் பாடி மகிழ்வாய்!
தாக்குறும் ________________யாவும் - இசைத்
தமிழினில் மாய்ந்து போகும்

அறிவியல் ஆய்வு செய்வாய் - நீ
அன்றாடச் ________________ படிப்பாய்!
செறிவுறும் ________________அறிவு - உளச்
செழுமையும் வலிவும் பெறுவாய்!

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. முதலெழுத்துகள் எத்தனை? ______________________

   முதலெழுத்துகளின் வகைகள் இரண்டினையும் தருக.

   ______________________ ______________________

2. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   தன்மை ______________________

   முன்னிலை ______________________

   படர்க்கை ______________________

3. அ. இலக்கணவகையால் பால் எத்தனை வகைப்படும்?

   ______________________

ஆ. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   ஆண்பால் ______________________

   பலவின்பால் ______________________

4. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

   ஆடை ______________________

   விழுப்பம் ______________________

   தரை ______________________

5. பின்வரும் சொற்களை வைத்துச் சொல்லியங்கள் எழுதுக.

   மழை ______________________

   உறவினர் ______________________

   காடு ______________________

புள்ளிகள் 15

6) **பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.**

*Nilavan is studying in the 6th grade. He draws art well. There was an art competition conducted in his school. In that competition he drew a scene of cows grazing the grass. That picture won the first prize. He hung this picture on the wall of his house. Everyone who saw the picture was happy.*

*Nilavan besucht die sechste Klasse. Er kann gut Bilder malen. An seiner Schule fand ein Malwettbewerb statt. Bei diesem Wettbewerb malte er die Aussicht grasender Kühe schön. Dieses Bild bekam den ersten Platz. Er ließ es bei sich zu Hause an der Wand hängen. Alle freuten sich, dies zu sehen.*

*Nilavan frequenta la sesta classe e lui disegna molto bene. Nella sua scuola ci fu una competizione di disegno. In questa competizione Nilavan disegnò delle mucche al pascolo. Il suo disegno vinse il primo posto e Nilavan lo appese al muro di casa.*

*Nilavan går i sjätte årskursen. Han är bra på att rita bilder. I hans skola hade de en bildtävling. På den tävlingen ritade han fint kossor som betade gräs. Den bilden vann första pris. Han hängde upp den på väggen som fanns hemma. Alla såg den och blev glada.*

*Nilavan går i 6. klasse. Han er god til at tegne. Der var en tegnekonkurrence på hans skole. Til konkurrencen tegnede han en flot tegning af kører, som græssede. Denne tegning vandt første præmie. Tegningen hængte han op på væggen i hans hjem. Alle kiggede og beundrede den.*

*Nivan går i 6. klasse. Han er flink til å tegne kunst. Det ble arrangert en kunstkonkurranse på skolen hans. Til denne konkurransen tegnet han et bilde av kuer som gresset. Bildet vant førstepremie. Han hengte opp bildet på veggen i huset sitt. Alle som så bildet ble glade.*

*Nilavan zit in groep 6. Hij kan heel mooi tekenen. In zijn school vond een tekenwedstrijd plaats. Hij tekende in die wedstrijd koeien die aan het grazen waren. Die tekening won de eerste prijs. Hij ging die tekening op de muur in zijn huis. Iedereen keek vol verwondering naar die tekening.*

*Nilavan étudie en 6ème année. Il dessine bien. Un concours de dessin s'est déroulé dans son école. A ce concours, il dessina une scène illustrant des vaches broutant l'herbe. Ce dessin a gagné le premier prix. Il l'accrocha sur le mur de chez lui. Tout le monde était heureux en voyant ce dessin.*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
- விளையாட்டுகள்
  - விளையாட்டுகள் பற்றி....
  - தமிழர்களின் வீரவிளையாட்டுகள், சிறப்புகள்
  - நீர் விரும்பும் விளையாட்டு எது? ஏன்?
  - விளையாட்டுகளினால் ஏற்படும் நன்மைகள்
- எமது பெற்றோர்
  - உமது பெற்றோர் பற்றிய அறிமுகம்
  - பெற்றோர் உம்மிடம் காட்டும் அக்கறை
  - பெற்றோருக்கு நீர் செய்யும் உதவிகள்
  - எதிர்காலத்தில் நீர் அவர்களுக்குச் செய்ய வேண்டியவை

புள்ளிகள் 20